**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மகநெகும கென்சல்ரன்சி அன்ட் புறஜெக்ட் மனேஜ்மென்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் (“லிமிட்டட்”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்குரிய குறிப்புகளுடன்கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, லிமிட்டட்டின் நிதிக் கூற்றுக்களில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

லிமிட்டட்டின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், லிமிட்டட்டின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புகள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இனங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- லிமிட்டட்டின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி

வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- லிமிட்டட்டின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- லிமிட்டட்டின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 31 ஆம் பந்தியின் பிரகாரம் நிதித்கூற்றுக்களை பயன்படுத்துவோரிற்கு பொருளாதார ரீதியான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக அனைத்து பொருண்மையான தகவல்களையும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய போதும்,ரூபா 415,000ஆன சட்ட செலவுகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும்,அந்த செலவினத்திற்குரிய வழக்குகள் தொடர்பான தகவல்களை குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 31 ஆம் பந்தியின் தேவைப்பாட்டிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோரிற்கு பொருளாதார ரீதியான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக அனைத்து பொருண்மையான தகவல்களையும் நிதிக்கூற்றுக்களில் உரியவாறு வெளிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தில் இடமளிக்கப்பட்டிருந்தால் அன்றி பதிலீடு செய்யக் கூடாத போதும் மீளாய்வாண்டு இறுதியில்ரூபா 563,052ஆன கிடைக்க வேண்டிய பெறுமதிசேர் வரி மீதுவரிப் பெறுமானம் நிதி நிலைமை கூற்றில் நடைமுறை பொறுப்புக்களில் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவற்றின் மீதிக்கு பதிலீடு செய்து முன்வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம்கிடைக்க வேண்டிய பெறுமதிசேர் வரி, வியாபார மற்றும் ஏனையசெலுத்த வேண்டியவைகளின் மூலம் பதிலீடு செய்யக்கூடாது. |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 40(அ) பந்திக்கு மாற்றமாக முன்னைய ஆண்டிற்குரிய சீராக்கங்களிற்காக முன்னைய காலப்பகுதியின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிதி நிலைமை தொடர்பாக மூன்றாம் கூற்றொன்றை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கி இருக்கவில்லை. | பதில் கிடைக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01இன் 40(அ) பந்திக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் இலக்கம் 09 இன் 5.5.15 பந்தியின் பிரகாரம் கிடைக்க வேண்டிய மீதிக்காக இழப்பீட்டு நட்டத்தை இணங்காண வேண்டிய போதும், மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் தொடர்புடைய தரப்பினரிடமிருந்து கம்பனிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 27,533,113தொகை தொடர்பாக கம்பனியினால் இழப்பீட்டு நட்டத்தை இனங்கண்டு இருக்கவில்லை. இந்த பெறவேண்டிய மீதியில் ரூபா 17,361,580ஆன மீதிக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்காததுடன் அவற்றில் ரூபா14,061,567தொகையானது 05 ஆண்டுகளிற்கு அதிகம் பழைய மீதிகளாது. | நீண்ட கால கிடைக்க வேண்டிய மீதிகள் முக்கியமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக மேற்கொண்ட செலவாவதுடன்அதற்காக நிறுவனத்தை வெற்றிகரமாக நடாத்திச் செல்லும் சந்தர்ப்பத்தில் அநேகமான பெறவேண்டியமீதிகளை கம்பனி அறவிட்டதுடன் தற்போது நீங்கள் குறிப்பிடும் அளவிற்கு குறைந்துள்ளது. இதற்காக தேவையான ஆவணங்கள் நிறுவனத்திடம் | இலங்கைநிதி அறிக்கையிடல் நியமம் இலக்கம் 09 இன் 5.5.15 பந்தியிக்கு இணங்க இழப்பீட்டு நட்டத்தை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியதுடன்பெறவேண்டிய மீதிகளின் தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காணப்படுவதுடன்அவற்றை அவதானிக்க தங்களிற்கு இயலுமை காணப்படுகின்றது. | |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 14(அ) பந்திக்கு மாற்றமாக, பணிப்பாளர் சபை மற்றும் கம்பனியின் சட்டக் கோவையின் பிரகாரம் சாதாரண முன்மொழிவு அங்கீகாரத்தின் மூலமேனும் அனுமதியை பெற்றுக் கொள்ளாது 2016 ஆண்டில் ஒதுக்கியிருந்த ரூபா 28,351,292 ஆன பங்கிலாபத்தை மீளாய்வாண்டிலும் நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த நிறுவனம் கம்பனி சட்டத்தின் கீழ் இஸ்தாபிக்கப்பட்டுள்ளதால் பங்குதாரர்களிற்கு இந்த பங்கிலாப ஒதுக்கீடு 2016 ஆண்டிற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டது. அதன் போது நிலவிய உள்நாட்டு இறைவரிசட்டம் பிரகாரம்,ஈட்டியுள்ள இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆண்டிற்கு முந்திய ஆண்டுகளில் ஈட்டியுள்ள இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு அந்த அந்த ஆண்டுகளில் ஒதுக்கிய குறைந்த பட்ச பங்கிலாபம் மாத்திரம் இங்கு காண்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 14(அ) பந்திக்கு இணங்குகின்ற ஒதுக்கீடுகள் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களின் கீழ் இனங்காணப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 12 இன் 15, 24 மற்றும் 58 பந்திகள் பிரகாரம்பிற்போடப்பட்ட வரி கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதும்,மீளாய்வாண்டில் நிலவிய ரூபா9,291,847 ஆன பிற்போடப்பட்ட வரிச் செலவை, கம்பனி இனங்காணாது ரூபா 5,756,424ஆன பிற்போடப்பட்ட வரி வருமானத்தை விரிவான வருமானக் கூற்றிற்கு இணக்கம் செய்திருந்ததால் ஆண்டின் இலாபம் ரூபா 9,291,847இனாலும் ஏனைய விரிவான வருமானம் ரூபா 5,756,424இனாலும் மிகையாக கணக்கிடப்பட்டிருந்தன.<br>அவ்வாறே மீளாய்வாண்டு இறுதியில் கம்பனியின் ரூபா5,756,427 ஆன பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பொன்றுநிலவிய போதும், நிதிக்கூற்றுக்களில் அது | பிற்போடப்பட்ட வரி வருமானம் மற்றும் வருடாந்த பிற்போடப்பட்ட வரிச் செலவு கணக்கிடலுடன் வித்தியாசம் காணப்படுவதால் தங்களின் கணக்கிடலை விரிவாக எங்களிற்கு அனுப்புமாறு தயவுடன் கோருவதுடன் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் அதற்கு பதில் வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது. | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 12 இன் 15, 24 மற்றும் 58 பந்திகளில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளிற்கு இணங்க பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு அல்லது சொத்துக்களை கணக்கிட்டு நிதி நிலைமை கூற்றில்மற்றும் பிற்போடப்பட்ட வரிச் செலவுகள் விரிவான வருமானக் கூற்றில் சரியாக இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா9,291,847ஆன பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பொன்றாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதால்மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 5,756,427இனால் நடைமுறையல்லாத பொறுப்புபெறுமதி குறைவடைந்து நடைமுறை சொத்துக்கள் ரூபா9,291,847இனால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் வரிக்கு பின்னரான இலாபத்தை கணக்கிடும் போதுரூபா 2,308,247 ஆன வரிச் செலவை கழிக்காது கூட்டிய காரணத்தால் வரிக்கு பின்னரான இலாபம்ரூபா 4,616,493 இனால்மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பதில் கிடைக்கவில்லை. | விரிவான வருமானக் கூற்றினுள் வரிக்கு பின்னரான இலாபத்தை கணக்கிடும் போதும்வரிச் செலவை சரியாக சீராக்க வேண்டும். |

**1.5.3 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 25 பந்தி பிரகாரம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு தொடர்பாக அனுமானத்தின் அடிப்படையில்நிதிக்கூற்றை தயாரிக்க வேண்டியதுடன்அது அவ்வாறு இடம்பெறவில்லை எனில்நிதிக்கூற்றுக்களில் உரியவாறு வெளிப்படுத்த வேண்டும். 2023 மார்ச் 20 திகதிய இலக்கம் அப/23/0394/608/033 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம்வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான மூன்று கம்பனிகளையும் ஒன்றிணைத்து தனிக் கம்பனியொன்றை இஸ்தாபிக்கதீர்மானித்து 2023 ஆகஸ்ட் மாதம் முதல்கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறுத்தியிருந்த காரணத்தால்கம்பனியின் தொடர்ந்தியங்கும் ஆற்றல்பற்றிய நிச்சயமற்ற தன்மை காணப்பட்ட போதும் தொடர்ந்தியங்கும் ஆற்றல்பற்றியஅனுமானத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | நீங்கள் குறிப்பிடும் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான கம்பனிகளை ஒன்றிணைத்துதனிக் கம்பனியாக இஸ்தாபிப்பது தொடர்பான தீருமானமொன்று எமக்கு அறிவிக்கப்படவில்லை. எனினும், கம்பனியை கலைக்க நடவடிக்கை எடுக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அமைச்சு அறிவுரை வழங்கியுள்ளதால்அதனை கணக்கீட்டு குறிப்புக்கள் மூலம் சமர்ப்பித்துள்ளதுடன்அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் வியாபார வருமானம் ஈட்ட முடியுமான போதும் அனைத்து செயற்பாட்டு நடவடிக்கைகளையும் நிறுத்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை பிரகாரம்செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறுத்த நேரிட்டது.எனினும் கம்பனியை | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 25 பந்தி பிரகாரம் தொடர்ந்து இயங்கும் ஆற்றல் தொடர்பாக அனுமானத்தின் அடிப்படையில்கம்பனியின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க முடியாதெனில் அது தொடர்பாக வெளிப்படுத்தி அதற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். |

கழைக்கும் வரை பேணிச் செல்லும் போது செலவு செய்ய வேண்டிய அத்தியவசியான செலவுகளை நிறுவனத்திற்கு மேற்கொள்ள நேரிட்டுள்ளது.

### 1.5.4 தொடர்புள்ள தரப்பினர்கள் மற்றும் தொடர்புள்ள தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் கம்பனிக் கணக்குகளின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியமீதிகள் முறையே ரூபா24,307,200தொகை மற்றும் ரூபா5,361,187தொகையான போதும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால்கம்பனிக்கு செலுத்த வேண்டிய ரூபா4,047,571ஆன மீதி மாத்திரம் அந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.மேலும், மீளாய்வாண்டு இறுதியில் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண கம்பனியிலிருந்து பெறவேண்டிய மீதி ரூபா 3,225,913 தொகை ஆன போதும்,மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண கம்பனியின்2025 ஜூன்16திகதியMNRCE/FN/LO/2025/32இலக்கம்கொண்ட கடிதம் பிரகாரம் கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா1,353,604 ஆனது. அதன் பிரகாரம் இந்த வித்தியாசத்தை இனங்கண்டுநிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை சரிசெய்யகம்பனியினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எமது கம்பனியின் புத்தக ஏடுகளில் காண்பிக்கப்படும் மீதிகள்நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளன.எனினும் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் குறிப்பிடப்படும் மீதிகளிற்கு இடையே அநேக வித்தியாசங்களை நாம் இனங்கண்டு எமது மீதிகளை சரிசெய்துள்ளோம். நிகழ் காலத்தில் இனங்கண்டுள்ள மீதிகள் தவறுகள் காணப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெளிவாக குறிப்பிடவில்லை.அவ்வாறே இனங்காணாத மீதிகளின் வித்தியாசத்தை இனங்காண நடவடிக்கை எடுத்த போதும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கணக்கு புத்தகங்களுடன் எமது மீதிகளை இணக்கம் செய்வதற்காக விரிவான விபரங்கள் தேவைப்படுகின்றன. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கியுள்ள மீதிகளின் சரியான தன்மையை உறுதி செய்து கொள்ள மற்றும்சான்றிடுவதற்கு இயலுமானவாறு உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதியொன்றை அறிமுகம் செய்ய வேண்டும். |

### 1.5.5 வரி பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்திய)சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம்முதலீட்டு வட்டிக்காக நிறுத்தி வைத்த வரித் தொகையிலிருந்து 5 சதவீதத்தை வருடாந்த வரி செலவிலிருந்து பதிலீடு செய்ய நிதி ஏற்பாடு வழங்கியுள்ள போதும்,கம்பனியினால் ரூபா 2,308,247ஆன வருடாந்த வரிச் செலவை கணக்கிடும் போது நிலையான வைப்பு வட்டிக்காகநிறுத்தி வைத்த வரியாக 30 சதவீதம் அதாவது ரூபா 21,929,918தொகையை வருடாந்த வரிச் செலவிலிருந்து கழித்த காரணத்தால் கம்பனியின் வருடாந்த இலாபம் ரூபா18,274,932இனால் அதிகரித்திருந்தது. | வியாபார வரி நட்டங்களை முதலீட்டு வருமானம் மூலம் பதிலீடு செய்ய இடமளிக்கப்பட்டுள்ளதால்முதலீட்டு வருமானத்திலிருந்து வியாபார நட்டங்களை நடைமுறை ஆண்டில் குறைக்கப்பட்டுள்ளது. நிலையான வைப்புக்களிற்காக வட்டி செலுத்தும் போதும்குறித்த நிதி நிறுவனம்5%ஆன நிறுத்தி வைத்தல் வரியை கழிப்பதுடன் அதற்குறிய நிறுத்தி வைத்தல்வரிச் சான்றிதழை அந்த நிதி நிறுவனம் எமக்கு வழங்குகின்றது. அந்த நிதி நிறுவனம் வழங்கும் வரி நிறுத்தி வைத்தல் சான்றிதழை வரி செலுத்தலாக கருதி செலுத்தப்படவுள்ள வரி அளவிலிருந்து இந்த நிறுத்தி வைத்தல் வரியை கழிக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தால் இடமளிக்கப்பட்டுள்ளதால் நீங்கள் குறிப்பிட்டுள்ள ரூபா21 மில்லியன் அளவை இலாபத்திலிருந்து குறைத்து காட்டியுள்ள கூற்று உண்மையானதன்று. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில்38(1)(ஆ) பிரிவிற்கு இணங்க மேற்கொள்ளப்படும் தொகுதி மீளாய்வின் போது இது தொடர்பாக விசேட கவனம் செலுத்திஎழுத்துமூல அறிவுரைகளை வெளியிட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 133(1) பிரிவு | கம்பனியின் பணிப்பாளர் சபையினால் ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு முறை பங்குதாரர்களின் வருடாந்த பொதுக் கூட்டமொன்றை கூட்ட வேண்டிய போதும்,கம்பனியினால் பங்குதாரர்களின் பொதுக் கூட்டமொன்றை 2019 ஆண்டிற்கு பின்னர் நடாத்தி இருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் பின்னர் நிலவிய கொவிட் 19தொற்று மற்றும் அரச பொறிமுறைக்கு எதிராக நடாத்தப்பட்ட போராட்டம் காரணமாகமற்றும் வருடாந்த பொதுக் கூட்டமொன்றை நடாத்துவதற்காக வருடாந்த கணக்குகள் | கம்பனி சட்ட ஏற்பாடுகளிற்கு இணங்க உரியவாறு பொதுக் கூட்டத்தை நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உரிய திகதியில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கணக்காய்வு செய்யப்பட்டு06 மாதங்களிற்கு முன்னர் கிடைக்க வேண்டிய போதும்அது நடைமுறையாக முன்னைய ஆண்டுகளில் இடம்பெறாததால் பங்குதாரர்களின் பொதுக் கூட்டத்தை நடாத்த முடியாதுள்ளது. | வருடாந்த கணக்குகளை கணக்காய்வற்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம்PED/01 /2021கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகம் செய்த செயற்பாட்டு கைநூலின்6.1 (i)பந்தி | சரியான நிதி முகாமைத்துவத் தொகுதியொன்றை செயற்படுதலும்,வள முகாமைத்துவத்தின் போது பணத்திற்கு பெறுமதி ஒன்றை உறுதி செய்வதற்காக தேவையான நிதி முகாமைத்துவத்தின் சிறந்த நடைமுறைகளை பின்பற்ற வேண்டிய போதும் கம்பனியின் வங்கி நடைமுறைக் கணக்கில்2024 ஆண்டினுள்ரூபா115.45மில்லியனான குறைந்த மீதியொன்றை பேணிச் சென்றிருந்ததுடன் ஆண்டு இறுதியில் அந் தொகை ரூபா121.74 மில்லியனானது.அதன் பிரகாரம் மேலதிக தொகையை பயனுள்ள பணியில் ஈடுபடுத்த கம்பனி செயற்பட்டு இருக்கவில்லை. | சொத்துக்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதனால்நீண்ட கால முதலீடுகளை மேற்கொள்ள நிறுவனத்திற்கு இயலுமை இல்லை.அதனால் திரட்டப்பட்ட அனைத்து தொகைகளும் மிக விரைவில் பொறுப்புக்களை விடுவிக்க மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைப்பதற்காக நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(ஆ) பிரிவிற்கு இணங்க செயற்பட்டு மேலதிக தொகையை ஆக்கபூர்வமாக முதலீடு செய்வது தொடர்பாக அறிவுரை வழங்கி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 9,995,804ஆன இலாபமானதுடன் அதற்கு எதிராக கடந்த ஆண்டின் நட்டம் ரூபா20,657,244ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா30,653,048ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.கடந்த ஆண்டிற்கு ஒப்பாக வருமானமொன்று மற்றும் விற்பனை கிரயமொன்று இல்லாத போதும்,செயற்பாட்டு செலவுகள் ரூபா 53,125,129இனால் குறைவடைந்தமை மற்றும் ரூபா73,099,726ஆன் நிதி வருமானமொன்றை ஈட்டியிருந்தமை இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

**2.2 பிரதான வருமான மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு**

- மீளாய்வாண்டில் வருவாய் மற்றும் ஏனைய வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நூறு சதவீத குறைவு அவதானிக்கப்பட்டதுடன் அதன் நேர் ஒத்ததாக விற்பனைக் கிரயமும் அப் பெறுமானத்தால் குறைவடைந்திருந்தது.
- மீளாய்வாண்டில் நிதிக் கிரயத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது86 சதவீத குறைவு அவதானிக்கப்பட்டது. வங்கி மேலதிக பற்று கடன் வசதிக்கான வட்டி குறைந்ததும் அதற்காக தாக்கம் செலுத்தியிருந்தது.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

- மீளாய்வாண்டில் கம்பனியின் நடைமுறை சொத்து விகிதம் மற்றும் விரைவு சொத்து விகிதத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே5.70இலிருந்து4.49வரை மற்றும் 5.69இலிருந்து 4.48வரை குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிர்மாணத் துறையில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக போதிய வியாபார சந்தர்ப்பங்கள் இல்லாததால்2023மார்ச்20திகதிய இலக்கம் அப/23/0394/608/033 கொண்ட அமைச்சரவை தீர்மானம் பிரகாரம்சுயவிருப்ப ஓய்வூதிய உத்தேச திட்டமொன்றை அறிமுகம் செய்வதன் மூலம் பதிவியணியினை குறைக்க வேண்டிய போதும்இந்த கம்பனியின் 47 ஊழியர்கள் சுயவிருப்ப ஓய்வூதிய முறையின் கீழ் ஓய்வு பெறச் செய்து 2023 ஆகஸ்ட் 11 திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம்கம்பனியை கலைப்பதற்கு உதவுவதற்காகசுயவிருப்புடன் ஓய்வுபெற்ற ஆளணியிலிருந்து பணி ஒப்படைப்பின் அடிப்படையில் 25 ஊழியர்கள்மீண்டும் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அந்த 25 ஊழியர்களையும் மீள் ஆட்சேர்ப்பது தொடர்பான தெரிவு செய்யும் அடிப்படை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன்கம்பனியை கலைக்கும் செயன்முறையையும் 2024 திசெம்பர் 31 திகதி வரை ஆரம்பித்திருக்கவில்லை. | நிர்மாணத் துறையில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக போதிய வியாபார சந்தர்ப்பங்கள் இல்லாத சூழ்நிலைகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான 03 கம்பனிகளையும் கழைக்கும் அடிப்படையின் மீது இந்த நிறுவனத்தையும் மூடிவிட தீர்மானித்ததாக கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிட்டுள்ள போதும் அது உண்மை இல்லை எனவும் இந்த நிறுவனத்திற்கு அறிவிக்காது இந்த தவறான தகவல்களைசமர்ப்பித்த காரணத்தால் இந்த தீர்மானத்தை எடுக்க நேர்ந்துள்ளதாக நினைவூட்டுகிறேன்.நீங்கள் எமது கணக்காய்வு பிரிவிடம் எமது நிறுவனத்தின் நிலைத்திருக்கும் ஆற்றலிற்கு பாதிக்கும் பொய்யான தகவல்களை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பவர்கள் தொடர்பில் தகவல்களை சமர்ப்பிப்பதானது தங்களின் கணக்காய்வு அவதானிப்புக்களிற்குஉட்படாதமை மிக்க கவலையாகும்.<br>எனினும் அந்த தீர்மானத்தின் பிரகாரம் வெற்றிகரமாக செயற்பட்டு வந்த இந்த நிறுவனத்தைதிடீரென வீதி அபிவிருத்தி அதிகாரசபை இந்த நிறுவனத்திற்கு அறிவித்ததுடன் ஊழியர்கள் அனைவர்களையும் ஓய்வுபெறச் செய்து நிறுவனத்தை | அமைச்சரவை தீர்மானங்களை மேற்கொள்ள சரியான மற்றும் காலரீதியான தகவல்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன்அந்த தீர்மானத்தின் காரணமாக முறைமை ஒன்றின் கீழ்செயற்படுத்த வேண்டிய போதும் அதற்கு இணங்காத பொறுப்பு வாய்ந்த தரப்பினரிற்கு எதிராகஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டினுள் மீண்டும் கடமையில் ஈடுபட்ட இருபது ஊழியர்களிற்கு 2024 ஆண்டினுள் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 21,011,338 தொகையும் செலுத்தப்பட்டு இருந்தது. | விரைவில்மூடிவிட நடவடிக்கை எடுக்குமாறுஅறிவிக்கப்பட்டது.அதன் பிரகாரம் அனைத்து ஊழியர்களினதும் சேவையை நிறுத்தி மூடிவிடலை செயற்படுத்தும் வரையான காலத்திற்காக குறைந்த பட்ச ஆளணியினரை பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது மீண்டும் கடமை கையளிப்பின் மீது கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | |
| (ஆ) | வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வளவொன்றினுள் கம்பனியின் பிரதான அலுவலகத்தை நடாத்திச் செல்வதுடன்ஒவ்வொறு ஆண்டும்வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கும் இன்வொய்ஸ் மீது கட்டிட வாடகைக்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. 2024 ஆண்டிலும் ரூபா. 1,932,307 தொகை வாடகைக்காக ஒதுக்கியிருந்த போதும் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கம்பனிக்கு இடையே வாடகை உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | இந்த நிறுவனம் வெற்றிகரமான செயற்படு நிலையில் காணப்பட்ட போது சில ஆண்டுகள் முழுவதும் நாம் இது தொடர்பாக கோரிக்கை விடுத்துள்ளதுடன் இதன் காரணமாக எமது நிதியிலிருந்து தாங்கள் குறிப்பிடும்வாடகை செலவு செலுத்தப்படாத போதும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அத் தொகையை எமது கம்பனிக்கு பெறவேண்டிய தொகையிலிருந்து கழித்துள்ளது.கடந்த வருடங்களின் உறுதி செய்யப்பட்ட பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.வீதி அபிவிருத்தி அதிகார சபை இன்வொய்ஸ் பத்திரத்தை வினியோகிப்பதால் அந்த தரப்பினரிற்கு இது தொடர்பாக அறிவுருத்துமாறு கோரப்படுகிறது. | உரியவாறு உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டு அதன் நிபந்தனைகளின் மீது வாடகை செலுத்த மற்றும் சரியாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |